# மாநகர் மன்ற ஊழியர்களுடன் தகராற்றில் ஈடுபட்ட

# 1 பெண் உட்பட 4 பேர் தடுப்பில் வைக்கப்பட்டனர்

**நமது நிருபர்**

கோலாலம்பூர், மார்ச் 8-

இரு வெவ்வேறு இடங்களில் கண்காணிப்புப் பணிகளை மேற்கொண்டிருந்த மாநகர் மன்ற ஊழியர்களுக்குக் காயம் விளைவித்ததாக நம்பப்படும் 1 பெண் உட்பட 4 பேர் தடுப்பில் வைக்கப்பட்டனர்.

பணியில் ஈடுபட்டிருந்த பொதுச்சேவை ஊழியர்களைத் தடுத்த குற்றத்திற்காக 186ஆவது குற்றவியல் சட்டத்தின் கீழ் விசாரணை மேற்கொள்ள 15 முதல் 39 வயதிற்குட்பட்ட இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டதாக டாங் வாங்கி மாவட்ட போலீஸ் தலைவர் ஏசிபி சுலிஸ்மி அஃபெண்டி சுலைமான் தெரிவித்தார்.

காயம் விளைவித்த குற்றத்திற்காகவும் இவர்கள் 323ஆவது குற்றவியல் சட்டத்தின் கீழ் விசாரணை செய்யப்படுகின்றனர்.

போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கும் உணவு டிரக்கை இடமாற்றம் செய்யும்படி உத்தரவிட்டதில் அக்கும்பலை சேர்ந்த பெண்ணுக்கும் அமலாக்க உறுப்பினருக்குமிடையே லோரோங் பெந்தேங்கில் காலை 11.30 மணிக்கு தகராறு ஏற்பட்டது.

இந்த பெண் ஓர் அமலாக்க உறுப்பினரைக் கடித்துக் காயப்படுத்தினார். அதன் பிறகு அப்பெண் கைது செய்து போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டதோடு இன்று வரை தடுப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

2ஆவது சம்பவம் மஸ்ஜிட் இந்தியாவில் அதே நாளில் இரவு 10.08 மணிக்கு நிகழ்ந்தது. இங்கு வர்த்தகத் தலத்தின் முன்புறம் சில வணிகர்களுடன் மாநகர் மன்ற ஊழியர்கள் சம்பந்தப்பட்ட கைகலப்பு ஏற்பட்டதாகத் தகவல் கிடைத்தது. கைகலப்பைத் தீர்த்து வைத்த போது அமலாக்க உறுப்பினர் ஒருவர் கடுமையான முறையில் மோதப்பட்டார். அதன் பிறகு சம்பவ இடத்தில் இருந்த போலீசார் 15 முதல் 39 வயதிற்குட்பட்ட 3 உள்ளூர் ஆடவர்களைக் கைது செய்தனர்.





கைது செய்யப்பட்ட ஒருவர் மீது போதைப்பொருள் குற்றப் பதிவு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாக ஓர் அறிக்கையில் ஏசிபி சுலிஸ்மி அஃபெண்டி சுலைமான் குறிப்பிட்டார்.